# தேர்தலில் தில்லு முல்லு செய்ய பா.ஜ.க. சதி!
# வெற்றியை அறுவடை செய்யும் நாள் மே-4...

## தஞ்சையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி!



கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களுக்கு வழங்கி வரும் புதுமைப்பெண் - தமிழ்ப்புதல்வன், உதவித்தொகையும் இனி, ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

2030-க்குள் கல்லூரி மாணவர்கள் 35 இலட்சம் பேருக்கு லேப்டாப் வழங்கப் போகிறோம்.

மேலும், முதியோர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கும் அனைத்து உதவித்தொகைகளுமே இனி இரண்டு மடங்காக வழங்கப் போகிறோம். திராவிட மாடல் 2.0-வில் எல்லாமே 2 மடங்குதான்!

அடுத்து, காவிரி நீர் போன்று தஞ்சை விவசாயிகளின் மனம் குளிர்விக்கும் அறிவிப்புகள்.

20 இலட்சத்திற்கும் அதிகமான உழவர்கள் பயன்பெறும் வகையில், நவீன மின்சார பம்புசெட்டுகளை வழங்கப் போகிறோம்!

கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

### வீடற்ற ஏழைகளுக்கு 10 லட்சம் வீடுகள்!

குடிசைகளே இல்லாத தமிழ்நாடு என்ற தலைவர் கலைஞரின் கனவு நனவாக, கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக, வீடற்ற ஏழைகளுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டி தரப்படும்.

வெண்ணாறு, வெட்டாறு பிரியும் தென்பெரம்பூரில் புதிய பாலம் கட்டப்படும்.

ஈச்சங்கோட்டை முதல் வெட்டிக்காடு வரை கல்லணை கால்வாய் 40 கோடியில் அகலப்படுத்தப்படும்.

தஞ்சாவூரில் மண்டல அளவிலான உயர்சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.

தஞ்சாவூரில் புற்றுநோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள்.

தஞ்சையில் உணவு பதப்படுத்துதல் குழுமம்.

பட்டுக்கோட்டையில் வேளாண் தொழிற்பூங்கா.

தற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை வாய்ப்பு இருக்கும் அனைத்து இடங்களிலும், உலர் களத்துடன் கூடிய நிரந்தர கட்டடங்களாக கட்டித் தருவோம்.

### தமிழ்நாடு நீர் பாதுகாப்புச் சட்டம்!

தமிழ்நாட்டின் அடுத்த 30 ஆண்டுகளுக்கான குடிநீர்த் தேவையையும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளுக்கான தேவைகளையும் கணக்கிட்டு, அதை நிறைவுசெய்யும் வகையில் 'தமிழ்நாடு நீர்ப் பாதுகாப்புச் செயல் திட்டம் 2056' உருவாக்கப்படும்.

டெல்டா மாவட்டங்களில் 10 ஆயிரத்து 500 கிலோமீட்டர் நீளத்துக்கு 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட ஒன்றரை லட்சம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நகரும் நெல் உலர்த்திகள் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

இப்போது சொல்லுங்கள்... தஞ்சாவூரில் பரப்புரையை இனி நீங்களே பார்த்துக் கொள்வீர்களா? பார்த்துக் கொள்வோம் (மக்கள்). இப்போது நான் உங்களுக்காக சொன்ன சாதனைகளையும் அறிவிப்புகளையும் அனைவரிடமும் கொண்டு சென்று சேர்ப்பீர்களா? சேர்ப்போம் (மக்கள்).

தஞ்சாவூரில் அனைத்து தொகுதியிலும் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). சூப்பர்! தஞ்சாவூர் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் மட்டுமல்ல, தி.மு.க.வின் வாக்கு களஞ்சியம் என்று கன்ஃபார்ம் ஆகிவிட்டது.

டெல்லியின் காலடியில் தமிழ்நாட்டை அடகு வைப்பது பழனிசாமியின் விருப்பம்! ஆனால், தமிழ்நாட்டின் மாநில உரிமைகளையும் - சுயமரியாதையையும் டெல்லியிடம் சரண் அடையாமல் பாதுகாத்து, அதற்கு தடையாக இருப்பது இந்த ஸ்டாலின்.

அதனால், கடந்த இரண்டு நாட்களாக பழனிசாமி என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்? "ஸ்டாலின் போயி சேரணும்" என்று தன்னுடைய ஆழ்மன விருப்பங்களை, அடிமனதில் இருக்கும் வக்கிரங்களை எல்லாம், பழனிசாமி பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர், மதிப்பிற்குரிய, அன்புக்குரிய பழனிசாமி அவர்களே, பிறந்த எல்லோரும் இறக்கத்தான் போகிறார்கள். மரணம் எல்லோருக்கும் ஏதோ ஒருநாள் வரத்தான் போகிறது! இந்த ஸ்டாலினுக்கும் வரும். ஆனால், இந்த ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களும், அந்தத் திட்டங்களால் வாழ்வு பெற்றவர்களும் என்றென்றைக்கும் என்னை நினைவில் வைத்துக் கொள்வார்கள். அந்த நினைவுகள் வாழும், அதை யாராலும் அழிக்க முடியாது. நான் மண்ணுக்கு போகலாம், ஆனால் நான் கொண்டு வந்த திட்டங்ககள் என்றைக்கும் தமிழ்நாட்டில் நிலைத்து நிற்கும்.

### இறுதி மூச்சு வரை ஓய்வின்றி உழைப்போம்!

என்னைப் பொறுத்தவரை, தலைசிறந்த தமிழ்நாட்டை - தலைநிமிர்ந்த தமிழ்நாட்டை உருவாக்க என்னுடைய இறுதிமூச்சு வரை ஓய்வில்லாமல் உழைப்பேன்! என் சக்தியை மீறியும் உழைக்கத் தயாராக இருக்கிறேன். திராவிட இயக்கத்தின் கொள்கை வாரிசுகளும், தி.மு.க.-வும் இருக்கும்வரை பழனிசாமியின் எண்ணம் பலிக்கவே பலிக்காது. தமிழ்நாட்டு மக்கள் பழனிசாமியின் ஆணவப் பேச்சுக்கு முடிவுகட்ட, அதற்குரிய நாள்தான் ஏப்ரல் 23!

அதற்கு, திருவிடைமருதூர் தொகுதியில் கோவி. செழியன் அவர்களுக்கும் - திருவையாறு தொகுதியில் துரை. சந்திரசேகரன் அவர்களுக்கும் - கும்பகோணம் தொகுதியில் சாக்கோட்டை அன்பழகன் அவர்களுக்கும் - ஒரத்தநாடு தொகுதியில் ஆர். வைத்திலிங்கம் அவர்களுக்கும் - பட்டுக்கோட்டை தொகுதியில் அண்ணாத்துரை அவர்களுக்கும் - பேராவூரணி தொகுதியில் அசோக்குமார் அவர்களுக்கும் - தஞ்சாவூர் தொகுதியில் சண். ராமநாதன் அவர்களுக்கும். உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை வழங்கி பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்!

அதேபோன்று, பாபநாசம் தொகுதியில் நம் கொள்கைத் தோழமை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த ஷாஜகான் அவர்களுக்கு ஏணி சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியா சத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்!

ஒரு விஷத்தை நீங்கள் நன்றாக புரிந்து கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் எடுத்து சொல்லுங்கள். நாம் போராடுவது ஒரு கட்சியின் வெற்றிக்காகவோ, ஒரு கூட்டணியின் வெற்றிக்காகவோ அல்ல! ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வெற்றிக்காக!

உங்கள் அனைவரின் பேராதரவுடன் அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 அரசில், எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிப்போம்! அதற்கு ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை!

வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



திருக்கோவிலூர் தொகுதிக்கு உட்பட்ட திருக்கோவிலூர் நகரத்தில் வெள்ளிக்கிழமை சிறப்பு தொழுகையில் இஸ்லாமியர்களிடம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் பொன்முடி அவர்கள், வெற்றி வேட்பாளர் பொன். கௌதம சிகாமணிக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் கழக மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன், கழக மாற்றுத் திறனாளிகள் அணியினர் உள்ளனர்.



திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் அகரம் கிராமத்தில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் சி.வி.கணேசன் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்தார். உடன் நல்லூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செம்பியன் தியாகராஜன் மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.

## திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில்
# அ.தி.மு.க. - த.வெ.க.வினர் 400 பேர் கழகத்தில் இணைந்தனர்!
## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில்!

*திருவண்ணாமலை, ஏப். 12-*

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த தச்சம்பட்டு, அல்லிகொண்டாப்பட்டு, சின்னக்கல்லப்பாடி, பறையம்பட்டு, மேலத்திக்கான், தலையாம்பள்ளம் ஆகிய ஊராட்சிகளிலிருந்து 400க்கும் மேற்பட்ட அ.தி.மு.க., த.வெ.க.வினர் அக்கட்சிகளிலிருந்து விலகி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

10.04.2026 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தொகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க., த.வெ.க.வினர் அக்கட்சிகளிலிருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு ஊராட்சி, அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சி.அச்சுதன், முன்னாள் தொடக்க வேளாண்மை சங்கத் தலைவர் இராஜலட்சுமி ஆகியோர் தலைமையிலும், மேலத்திக்கான் ஊராட்சி, கீழ்அணைக்கரையைச் சேர்ந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் தலைமையிலும், சின்னக்கல்லப்பாடி அ.தி.மு.க. வைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் சக்கரவர்த்தி தலைமையிலும்,

தலையாம்பள்ளம் அ.தி.மு.க.வைச் சேர்ந்த கே.குமார் தலைமையிலும், மேலத்திக்கான் பானுமதி, மகேஸ்வரி, கற்பகம், சாரதா, முனியம்மாள், லலிதா, பழனி யம்மாள், எஸ்.கோவிந்தன், கோபால், கே.ஹரிஷ் உட்பட 100 பேரும், தச்சம்பட்டு த.வெ.க.வைச் சேர்ந்த பி.விநாயகம், பி.லோகனா தன், டி.ராஜாராம், டி.சுப்பிரமணி, ஜி. வெங்கடேசன், டி.அபிஷேக், கே.லட்சுமணன் உட்பட 50பேருக்கும், தச்சம்பட்டு க.பாட்டம்மன், பா.சங்கர், த.முருகன், பி. ஏழுமலை, வே.கோவிந்தன், இரா.பிரகாஷ், பொ.சங்கர் உட்பட 50பேரும்,

தச்சம்பட்டு ஊராட்சி மீனாட்சி, பிரேமா, பிரபா, கனகவள்ளி, ரேணுகா, தமிழரசி, அம்மு உட்பட 50 பேரும், அல்லிகொண்டாப்பட்டு நவீன், ஜார்ஜ், தினேஷ், பிரவீன், தாமஸ், நெல்சன், ஆனஸ்ட் உட்பட 100 பேரும் அக்கட்சிகளிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட துணைச் செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ், முன்னாள் ஊராட்சி தலைவர் ஏ.முத்துகுமார், மாநில தொ.மு.ச. செயலாளர் க.சௌந்தரராசன், மாநில அமைப்புசாரா தொ.மு.ச. ஏ.ஏ.ஆறுமுகம், பகுதிச் செயலாளர்கள் சி.சண்முகம், பா.ஷெரீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் எஸ்.டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. ஆவுடையார்கோவில் வடக்கு ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வாக்கு சேகரிந்தார். உடன் தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர், முன்னாள் இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர், மாநில தீர்மானக்குழு துணைத்தலைவர் சுப.த.திவாகரன், உதயம் சண்முகம், ராஜேந்திரன், கானூர் விஸ்வநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.